The changes conveyed by way of this Addendum are to be read in conjunction with the DRHP and, accordingly, the corresponding references in the DRHP stand updated pursuant to this Addendum. The information in this Addendum supplements and updates the information in the DRHP, as applicable, and accordingly henceforth any reference to the DRHP shall be a reference to the DRHP read with this Addendum. However, this Addendum does not purport to, nor does it, reflect all the changes that have occurred from the date of filing of the DRHP and till the date of this Addendum. Accordingly, this Addendum does not include all the changes and/or updates that will be included in the Red Herring Prospectus and/or the Abridged Prospectus and/or the Prospectus as and when filed with the Registrar of Companies, Ahmedabad **("RoC")**, the SEBI and the Stock Exchanges. Please note that the information included in the DRHP will be suitably updated, including to the extent stated/ updated by way of this Addendum, as may be applicable, in the Red Herring Prospectus, the Abridged Prospectus, and the Prospectus. Investors should not rely on the DRHP or this Addendum for any investment decision, and should read the Red Herring Prospectus, as and when it is filed with the RoC, SEBI and the Stock Exchanges before making an investment decision with respect to the Issue.

This Addendum which has been filed with SEBI and the Stock Exchanges and shall be available on the website of SEBI at www.sebi.gov.in, the website of the Stock Exchanges at www.nseindia.com and www.bseindia.com, the website of our Company at https://medicaphealthcare.in/ and the website of the Book Running Lead Manager, namely, Aryaman Financial Services Limited on www.afsl.co.in. Unless stated otherwise, all references to page numbers in this Addendum are to the page numbers of the DRHP.

BOOK RUNNING LEAD MANAGER	REGISTRAR TO THE ISSUE
ARYAMAN FINANCIAL SERVICES LTD	KFINTECH
Aryaman Financial Services Limited 60, Khatau Building, Gr. Floor, Alkesh Dinesh Modi Marg, Fort, Mumbai - 400 001, Maharashtra, India **Telephone:** +91-22-6216 6999 **E-mail:** ipo@afsl.co.in **Investor Grievance E-mail:** feedback@afsl.co.in **Website:** www.afsl.co.in **Contact Person:** Vatsal Ganatra **SEBI Registration Number:** INM000011344	**KFIN Technologies Limited** Selenium Tower-B, Plot 31 & 32, Gachibowli, Financial District, Nanakramguda, Serilingampally, Hyderabad - 500 032, Telangana **Telephone:** +91 40 6716 2222 **E-mail:** medicap.ipo@kfintech.com **Investor Grievance E-mail:** einward.ris@kfintech.com **Website:** www.kfintech.com **Contact Person:** M Murali Krishna **SEBI Registration Number:** INR000000221

All capitalised terms used in this Addendum shall, unless specifically defined herein or unless the context otherwise requires, have the meaning ascribed to them in the DRHP.

For **MEDICAP HEALTHCARE LIMITED**
On behalf of the Board of Directors
Sd/-
Leena Kumari Jain
Company Secretary and Compliance Officer

Place: Vadodara, Gujarat
Date: November 20, 2026

Medicap Healthcare Limited is proposing, subject to applicable statutory and regulatory requirements, receipt of requisite approvals, market conditions and other considerations, to make an initial public offering of its Equity Shares and has filed the DRHP dated September 22, 2025 with SEBI and the Stock Exchanges. The DRHP is available on the website of SEBI at www.sebi.gov.in, the website of the Stock Exchanges at www.nseindia.com and www.bseindia.com, the website of our Company at https://medicaphealthcare.in/ and the website of the Book Running Lead Manager, namely, Aryaman Financial Services Limited on www.afsl.co.in. Potential investors should note that investment in Equity Shares involves a high degree of risk and for details relating to such risks, please see the section entitled ***"Risk Factors"*** beginning on page 33 of the DRHP and the details set out in the RHP, when filed. Potential investors should not rely on the DRHP filed with SEBI and Stock Exchanges for making any investment decision and should rely on the RHP, when filed, for making any investment decision.

This announcement does not constitute an invitation or offer of securities for sale in any jurisdiction. The Equity Shares offered in the Issue have not been and will not be registered, listed or otherwise qualified in any jurisdiction except India and may not be offered or sold to persons outside of India except in compliance with the applicable laws of each such jurisdiction. In particular, the Equity Shares offered in the Issue have not been and will not be registered under the U.S. Securities Act of 1933, as amended (the **"U.S. Securities Act"**), or the securities laws of any state of the United States and may not be offered or sold in the United States, except pursuant to an exemption from, or in a transaction not subject to, the registration requirements of the U.S. Securities Act and applicable state securities laws. The Equity Shares offered in the Issue are being offered and sold only outside the United States in "offshore transactions" as defined in and in reliance on Regulation S under the U.S. Securities Act (**"Regulation S"**). See ***"Other Regulatory and Statutory Disclosures – Selling restrictions and transfer restrictions"*** on page 363 of the DRHP.

Adfactors 546/26

திருப்பரங்குன்றம் மலை தீபத் தூணில் 24–ந்தேதி தீபம் ஏற்ற சுப்ரீம் கோர்ட் அனுமதி

நிரந்தரமாக தீபம் ஏற்ற தடை



மதுரை, நவ. 21–

மதுரை மாவட்டத்தில், திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தீபத் தூணில், வரும் 24ல் திருக்கார்த்திகை தினத்தன்று தீபம் ஏற்ற அனுமதி அளித்து சுப்ரீம் கோர்ட் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. அதே சமயம், நிரந்தரமாக தீபம் ஏற்ற உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுக்கு தடை விதித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த ஹிந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார், திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதி கோரி, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். இதை விசாரித்த தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தீபம் ஏற்ற அனுமதி அளித்து கடந்த ஆண்டு நவம்பரில் உத்தரவிட்டார்.

இதை இரு நீதிபதிகள் அமர்வு உறுதி செய்தது. இதை எதிர்த்து, தமிழக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இது தொடர்பான அனைத்து வழக்குகளையும், நீதிபதிகள் அரவிந்த் குமார், விபுல் எம்.பஞ்சோலி அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த ஆண்டு மட்டும் தர்கா அருகே உள்ள தீபத்தூணில், வரும் 24ல் திருக்கார்த்திகை தினத்தன்று தீபம் ஏற்ற கடுமையான பாதுகாப்பு நிபந்தனைகளுடன் நீதிபதிகள் அனுமதி அளித்தனர்.

மேலும், ஆண்டுதோறும் நிரந்தரமாக தீபம் ஏற்ற அனுமதி அளித்த உயர் நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்தனர். 'இது, முற்றிலும் தற்காலிக ஏற்பாடு மட்டுமே' என தெளிவுபடுத்திய நீதிபதிகள், வழக்கை இறுதி விசாரணைக்காக, 2027 ஜனவரி மாதம் இரண்டாவது வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

இந்த உத்தரவின் மூலம், ஆண்டுதோறும் தீபம் ஏற்ற வேண்டும் என்ற உயர் நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதித்துள்ளது. அதே சமயம் இந்த ஆண்டு மட்டும் ஒரு முறை தீபம் ஏற்ற அனுமதி அளித்து, மனுதாரர் தரப்பு கோரிக்கையையும் தற்காலிகமாக பரிசீலித்துள்ளது. மலையின் மீதான உரிமை மற்றும் பாரம்பரிய வழிபாடு குறித்த இறுதி முடிவு, அடுத்தாண்டு நடக்கும் விரிவான விசாரணையின் போதே தீர்மானிக்கப்படும்.

நிபந்தனைகள்

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்காக நீதிபதிகள் கூறிய நிபந்தனைகள் வருமாறு:–

தீபம் ஏற்றும் நிகழ்வு கோவில் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களைக் கொண்ட குழுவினால் மட்டுமே மேற் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய நபர்களின் எண்ணிக்கை மற்றும் உறுப்பினர்களின் விவரங்கள், கோவில் செயல் அலுவலர், இந்திய தொல்லியல் துறை மற்றும் மதுரை போலீஸ் கமிஷனர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, மதுரை மாவட்ட கலெக்டரால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைப்பு அதிகாரியாக மதுரை கலெக்டர் செயல்பட வேண் டும்.

பாதுகாப்பு வழங்கி, தீபத்தூணுக்கு சென்று வருவதை ஒழுங்குபடுத்துவதை மதுரை போலீஸ் கமிஷனர் உறுதி செய்ய வேண்டும்.

தீபம் ஏற்றுவது அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்ய உள்ளூர் போலீசாருக்கு துணையாக, சி.ஆர்.பி.எப் படை வீரர்களை பயன்படுத்துவது குறித்து மாநில அரசு கோரினால், மத்திய அரசு பரிசீலித்து வசதி செய்து தர வேண்டும்.

பொதுமக்கள் செல்லக்கூடாது

பொதுமக்கள் யாரும் கோவில் நிர்வாகம் அங்கீகரிக்கும் குழுவினருடன் தீபத்தூணிற்குச் செல்லக் கூடாது. குறிப்பிட்ட அந்த இடத்தில் எந்தவொரு ஊர்வலம், பொதுமக்கள் கூடுதல், ஆர்ப்பாட்டம், முழக்கமிடுதல் அல்லது தீபம் ஏற்றுவதைத் தவிர்த்த பிற நடவடிக்கைகள் எதுவும் அனுமதிக்கப்படக்கூடாது.

அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மற்றும் மேற்பார்வை பாதுகாப்பிற்கு தேவையான அதிகாரிகள் தவிர வேறு யாருக்கும் 'தீபத்தூண்' பகுதிக்கு செல்ல அனுமதி இல்லை.

உடனே வெளியேற வேண்டும்

தீபம் ஏற்றி முடித்த உடனேயே எந்தவொரு தற்காலிகப் பொருட்களையோ அல்லது பிற பொருள்களையோ விட்டுச் செல்லாமல் உடனடியாக இடத்தை விட்டு வெளியேற வேண்டும்.

தொல்லியல் சின்னங்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்திய தொல்லியல் துறை பொருத்தமான நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

நடைமுறையிலுள்ள சட்டப்பூர்வத் தேவைகளுக்கு முற்றிலும் உட்பட்டு மட்டுமே தீபம் ஏற்றுவது மேற்கொள்ளப்பட வேண்டும். தீபத்தூண் பகுதியில் தோண்டுதல், கட்டுமானம், அமைப்பில் மாற்றம் செய்தல், நிரந்தர அமைப்புகளை நிறு வுதல் அல்லது நினைவுச் சின்னங்கள், சமயக் கட்டிடங்கள் அல்லது சொத்துகளுக்கு எவ்விதப் சேதமும் ஏற்படுத்துவது அனுமதிக்கப்படக்கூடாது.

பாரம்பரியான சமய வழிபாட்டு முறைகள் எவ்வித இடையூறுமின்றித் தொடர வேண்டும். அதேபோல், தர்கா மற்றும் பிற நிறுவனங்களின் சட்டப்பூர்வமான சமய நடவடிக்கைகள், அவற்றுக்கு சென்று வருதல் மற்றும் அனுபவிக்கும் உரிமை ஆகியவற்றில் எந்த வகையிலும் தலையிடக் கூடாது.

தீபம் ஏற்றுவது அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதிசெய்வதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அதிகாரிகள் செய்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்ட அனைவரும் அதிகாரிகளுக்குத் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பை நல்குவார்கள் என்றும், இந் நிகழ்வு கோரும் கட்டுப்பாடு மற்றும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வார்கள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

3 நாளில் அறிக்கை

இன்று செய்யப்பட்டுள்ள இந்த வரம்பிற்குட்பட்ட தற்காலிக ஏற்பாடானது வழக்கின் இறுதி முடிவல்ல. இந்த நிகழ்வு முடிந்த 3 நாட்களுக்குள், மேற்கூறிய வழிகாட்டுதல்களைப்நிறைவேற்றியது தொடர்பான சுருக்கமான அறிக்கையை மதுரை மாவட்ட கலெக்டர் தாக்கல் செய்ய வேண்டும். மேல்முறையீடு மனுக்களுக்கு பதில் மனு 6 வாரங்களிலும், விளக்க மனு 3 வாரங்களிலும் தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.





இறுதி ஊர்வலத்தில் வி.எஸ்.பாபு உடலை முதலமைச்சர் விஜய் தோளில் சுமந்து சென்றார்

சென்னை, நவ.21

உடல்நலக்குறைவால் மரணம் அடைந்த வி.எஸ்.பாபு எம்.எல்.ஏ.வின் உடல் நேற்று தகனம் செய்யப்பட்டது. முன்னதாக நடந்த இறுதி ஊர்வலத்தின்போது வி.எஸ்.பாபுவின் உடலை முதலமைச்சர் விஜய் தோளில் சுமந்து சென்றார்.

சென்னை கொளத்தூர் தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்தவர் வி.எஸ்.பாபு. இவர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை தோற்கடித்ததால் மிகவும் கவனம் பெற்றார். இந்த நிலையில் கடந்த செப்டம்பர் 9ந் தேதி உடல்நலக்குறைவால் சென்னையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வி.எஸ்.பாபு மரணம் அடைந்தார்.

ஆஸ்பத்திரியில் இருந்த அவரது உடல், பெரம்பூரில் உள்ள அவரது வீட்டுக்கு கொண்டு வரப்பட்டு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருந்தது. அங்கு அவரது உடலுக்கு முதலமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர்கள், கட்சியினர் முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர்.

மேலும் தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, அண்ணா தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், பா.ஜ.க. சார்பில் மாநிலச் செயலாளர் கராத்தே தியாகராஜன் உள்ளிட்டோர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர். காங்கிரஸ் கட்சி சார்பில் அமைச்சர் ராஜேஷ்குமார், விஜய் வசந்த் எம்.பி., ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் நவாஸ் கனி எம்.பி. உள்பட பலர் வி.எஸ்.பாபு உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஊர்வலத்தில் நடந்து சென்ற முதலமைச்சர்

இதனைத் தொடர்ந்து, வி.எஸ்.பாபுவின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை 4.15 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டது. ஊர்வலத்தில் முதலமைச்சர் விஜய் கலந்து கொண்டு வி.எஸ்.பாபுவின் உடலை சுமார் 50 மீட்டர் தூரம் தோளில் சுமந்து கொண்டு இறுதி ஊர்வல வாகனத்தில் ஏற்றினார். தொடர்ந்து இறுதி ஊர்வல வாகனத்தின் பின்னால் முதலமைச்சர் விஜய், அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, மரிய வில்சன், விஜய் பாலாஜி, அருண்ராஜ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்பட பலர் நடந்தே சென்றனர். வி.எஸ்.பாபுவின் வீட்டில் இருந்து திரு.வி.க.நகர் மாநகராட்சி மின்மயானம் வரை சுமார் 2 கி.மீ. தூரம் முதலமைச்சர் விஜய், செருப்பு அணியாமல் நடந்து சென்றார்.

திரு.வி.க.நகர் மின்மயானத்தில் வி.எஸ்.பாபுவின் உடல் மாலை 5.15 மணியளவில் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்குகள் முடிந்ததும் முதலமைச்சர் விஜய் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

கடைகள் அடைப்பு

வி.எஸ்.பாபுவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பெரம்பூர் பகுதி முழுவதும் நேற்று கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

மாதவரம் நெடுஞ்சாலை, பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் அதனை ஒட்டிய தெரு வீதிகள் உள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன.

தமிழகம் முழுவதும் கைவிடப்பட்ட குவாரிகளை சுற்றி 5 அடி உயர தடுப்பு வேலி: தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ.21

தமிழகம் முழுவதும் கைவிடப்பட்ட குவாரிகளை சுற்றி 5 அடி உயர தடுப்பு வேலி அமைக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குனர் பிரபுசங்கர் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

சமீப காலங்களில் பாதுகாப்பற்ற கைவிடப்பட்ட குவாரிகளில் உயிரிழப்புகளை ஏற்படுத்தும் விபத்துகள் பதிவாகி வருகின்றன. இது மிகுந்த கவலையளிக்கிறது. இத்தகைய பாதுகாப்பற்ற கைவிடப்பட்ட குவாரிகள், குறிப்பாக, பருவமழையின் போது மழைநீர் தேங்கும் ஆழமான குழிகள், உள்ளூர்வாசிகள், குழந்தைகள், பாதசாரிகள் மற்றும் மேய்ச்சல் கால்நடைகள் தவறி விழுவதற்கும், நீரில் மூழ்குவதற்கும் வழியை ஏற்படுத்துகின்றன.

இதை தவிர்ப்பதற்காக, அரசு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்கள் இரண்டிலும் அமைந்துள்ள காலாவதியான அனைத்து கைவிடப்பட்ட குவாரிகளைச் சுற்றியும் நீடித்திருக்கக்கூடிய சுற்றுவேலி அமைக்கப்பட வேண்டும். நீடித்த உழைப்பு மற்றும் பயனுள்ள தடுப்பை உறுதி செய்வதற்காக, அனைத்து குவாரிகளைச் சுற்றியும் குறைந்தபட்சம் 5 அடி உயரத்திற்கு வேலி அமைக்கப்பட வேண்டும்.

அரசு நிலங்களில் அமைந்துள்ள கைவிடப்பட்ட குவாரிகளுக்கு 2 மாத காலத்திற்குள் வேலி அமைக்கும் பணிகளை அதிக முன்னுரிமை அளித்து முடிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட முன்னாள் குத்தகைதாரர்கள் தங்கள் சொந்த செலவில் முறையான வேலியை அமைத்துள்ளார்களா? என்பதை உறுதி செய்ய, காலாவதியான அனைத்து பட்டா நில குவாரிகளிலும், விரிவான கள சரிபார்ப்பை மேற்கொள்ள வேண்டும்.

முன்னாள் குத்தகைதாரர்கள் அதை பின்பற்றத் தவறியிருந்தால், உடனடியாக அறிவிப்புகள் வழங்கப்பட வேண்டும். தமிழ் நாடு சிறு கனிம சலுகை விதிகளின் கீழ் கடுமையான அமலாக்க நடவடிக்கை தொடங்க வேண்டும். கைவிடப்பட்ட குவாரி என்பதைத் தெளிவாகக் குறிக்கும் வகையில், அதன் ஆழத்தை குறிப்பிட்டும், அத்துமீறி நுழைவதற்கு எதிரான எச்சரிக்கையுடனும் கூடிய முக்கிய எச்சரிக்கை பலகைகள், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அதன் சுற்றளவில் வைக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

witzenmann

சுற்றுச்சூழல் இசைவாணை

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தமிழ்நாடு, அடையாள எண். EC26C3806TN5153227N, தேதி 16.11.2026 மூலம் செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் , பாலூர் அ கிராமம், தமிழ்நாடு சர்வே எண்கள்: 28/1, 28/2, 29, 30/1, 30/2, 31/1, 31/2, 31/3, 31/4A, 31/4B, 38/1C, 38/2B, 421/1A, 421/1B, 421/2, 421/3, 422/1, 422/2A, 422/2B, 423/1, 423/2, 424/1A, 424/1B, 424/2A, 424/2B, 425/1, 425/2, 425/3, 425/4, 425/6, 426, 430/2, 431/1, 431/2, 431/3 மற்றும் 432/1 விட்சென்மான் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆலைக்கு சுற்றுச்சூழல் இசைவாணை வழங்கியுள்ளது.

இவ்விசைவாணையின் முழு விவரங்களை மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இணையதளமான https://parivesh.nic.in/ ஆகியவற்றில் காணலாம்.

இயக்குநர்,
விட்சென்மான் பிசினஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
எண் 119, திருநீர்மலை சாலை, குரோம்பேட்டை,
சென்னை – 600044, தமிழ்நாடு

நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னர் நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: – ஏ1, 6வது தளம், ட்ரேட் ஸ்டார், அந்தேரி, குர்லா சாலை, ஜே பி நகர், அந்தேரி (கிழக்கு), மும்பை – 400059.

NIWAS HOUSING FINANCE

சுவாதீன அறிவிப்பு {விதி 8(1) மற்றும் (2)}

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள ஈடுபெற்ற கடன் அளித்தவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (சட்டம்) கீழும் மற்றும் பிரிவு 13(12)–ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002–ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் (3–வது விதிமுறைக்கு) ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் NHFL–ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப் பிரிவு 13 துணைப்பிரிவு (4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், 2002–ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 8–வது விதிகளுக்கு இணங்கவும், ஒவ்வொரு சொத்துக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு (8)–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது என்னவென்றால், இச்சொத்து தொடர்பாக எவ்விதப் பரிவர்த்தனையும் மேற்கொள்ள வேண்டாம். இச்சொத்தின் மீது மேற்கொள்ளப்படும் எவ்விதப் பரிவர்த்தனைகளும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும், அதற்கான வட்டி மற்றும் இதரக் கட்டணங்களுக்கும், NHFL–ன் உரிமைக் கோரலுக்கு உட்பட்டதாகும்.

கடன் கணக்கு எண்.	கடன்தாரர்(கள்) & சொத்து விவரங்கள்	தொகை மற்றும் டிமாண்ட் நோட்டீஸ் தேதி	சுவாதீனத் தேதி	சுவாதீன நிலை
LNKOLOHL-09240048144	1. டில்லிராஜ் கே (கடன்தாரர்), 2. சுபா டி (உடன் கடன்தாரர்)	ரூ.23,66,744/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து அறுபத்தாறு ஆயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு மட்டும்) தேதி : 14 அக்டோபர் 2025	17 நவம்பர் 2026	நேரடி சுவாதீனம்

சொத்து குறித்த விவரம் : சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. திருவள்ளுவர் தெரு, பழைய கிராம நத்தம் சர்வே எண். 1051, கிராம நத்தம் பட்டா எண். 1051 பகுதி, டவுன் சர்வே எண். 198, பிளாக் எண். 53, வார்டு C, மாதவரம் கிராமம், மாதவரம் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ள 600 சதுர அடி பரப்பளவு, (56 சதுர மீட்டர்) நிலம் மற்றும் எல்லைகள்: வடக்கு – டவுன் சர்வே எண். 196/1ல் உள்ள சேவியர் மற்றும் பிறரின் தற்போதைய சொத்து, தெற்கு – டவுன் சர்வே எண். 204ல் தற்போது 3 அடி அகலமுள்ள பொதுப் பாதை திருவள்ளுவர் தெருவுக்கு செல்கிறது, கிழக்கு – டவுன் சர்வே எண். 197, தற்போது மகேந்திரன் சொத்து, மேற்கு – டவுன்சர்வே எண். 199, தற்போது தாமசுக்கு சொந்தமான சொத்து. நிலத்தின் விஸ்தீரணம் : வடக்கு: 4.1 மீட்டர், தெற்கு: 4.1 மீட்டர், கிழக்கு: 13.7 மீட்டர், மேற்கு: 13.6 மீட்டர்

இடம் : சென்னை
தேதி : 21.11.2026

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
நிவாஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

லக்ஷ்மி கார்கோ கம்பெனி லிமிடெட்

(CIN: U52599TZ1991PLC039186)

பதிவு அலுவலகம்: 34A, காமராஜ் சாலை, ரெட்ஃபீல்ட்ஸ், கோயம்புத்தூர் – 641018, தமிழ்நாடு.

படிவம் எண். INC–25A

பப்ளிக் லிமிடெட் நிறுவனத்தை பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாற்றுவது பற்றிய விளம்பரம்

மண்டல இயக்குனர் முன்பாக, கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம்
தென் மண்டலம், சென்னை

நிறுவனங்கள் சட்டம், 2013, நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 14 மற்றும் நிறுவனங்கள் (ஒருங்கிணைப்பு) விதிகள், 2014–ன் விதி 41 ஆகியவற்றின் கீழ் மற்றும்

M/s. லக்ஷ்மி கார்கோ கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: 34A, காமராஜ் சாலை, ரெட்ஃபீல்ட்ஸ், கோயம்புத்தூர் – 641018, தமிழ்நாடு …விண்ணப்பதாரர்

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், மேற்குறிப்பிடப்பட்ட பப்ளிக் லிமிடெட் நிறுவனத்தை பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாற்ற, நிறுவனச் சட்டம், 2013–ன் பிரிவு 14 மற்றும் மேற்கூறிய விதிகளின்படி மத்திய அரசிடம் விண்ணப்பிக்க உள்ளது. இது தொடர்பான சிறப்பு தீர்மானம் நவம்பர் 9, 2026 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட மாற்றம்/நிலைப்பாட்டினால் பாதிக்கப்படக்கூடிய எந்த ஒரு நபரேனும், இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள், அவரது எதிர்ப்பின் தன்மை மற்றும் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு உறுதிமொழிப் பத்திரத்தினை நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமோ தெற்கு மண்டல இயக்குநருக்கு அனுப்பலாம். மண்டல இயக்குனரின் முகவரி: (தென்மண்டலம்) 5–வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் ரோடு, சென்னை – 600006, தமிழ்நாடு.

அத்துடன், அதன் நகலை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

லக்ஷ்மி கார்கோ கம்பெனி லிமிடெட் (விண்ணப்பதாரர்) சார்பாக
ஒப்பம்/–
N R செல்வராஜ்
இயக்குநர்
DIN: 00013954

தேதி: 21.11.2026
இடம்: கோயம்புத்தூர்

பதிவு அலுவலகம்: 34A, காமராஜ் சாலை, ரெட்ஃபீல்ட்ஸ், கோயம்புத்தூர் – 641018, தமிழ்நாடு.

Veranda

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ஜி. ஆர். காம்ப்ளக்ஸ், முதல் தளம், எண்.807 - 808, அண்ணாசாலை, நந்தனம், சென்னை, தமிழ்நாடு 600 035.
Ph: +914446901007 | CIN: L74999TN2018PLC125880
Website: www.verandalearning.com. | Email id : secretarial@verandalearning.com

தபால் வாக்குப் பதிவு அறிவிப்பு மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு தகவல்

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் ("சட்டம்") பிரிவுகள் 108 மற்றும் 110, திருத்தப்பட்ட நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 ("விதிகள்"), திருத்தப்பட்ட இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் ("SEBI பட்டியலிடல் விதிமுறைகள்") விதிமுறை 44, இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (மூலதன வெளியீடு மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2018 ("SEBI ICDR விதிமுறைகள்"), இந்திய அரசின் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட சுற்றறிக்கைகள், இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனம் வெளியிட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலகத் தரநிலை–2 மற்றும் நடைமுறையில் உள்ள பிற பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் விதிமுறைகள் (சட்டப்பூர்வ திருத்தங்கள், மாற்றங்கள், மாறுபாடுகள் அல்லது மறு அமலாக்கம் உட்பட) ஆகியவற்றின் படி, நவம்பர் 20, 2026 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பில் ("அறிவிப்பு") குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தீர்மானம்(களை) மின்னணு வாக்குப்பதிவு ("தொலைதூர மின்னணு வாக்களிப்பு") செயல்முறை மூலமாக மட்டுமே நிறைவேற்றுவதற்கு வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட் ("நிறுவனம்") அதன் உறுப்பினர்களின் ஒப்புதலைக் கோருகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், வெள்ளிக்கிழமை, நவம்பர் 13, 2026 அன்று, நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேடு (Register of Members) அல்லது வைப்புத்தொகை நிறுவனங்களிடமிருந்து (Depositories) பெறப்பட்ட பயனாளிகளின் உரிமையாளர் பதிவேட்டில் (Register of Beneficial Owners) பெயர்கள் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு, நவம்பர் 20, 2026 தேதியிட்ட 'தபால் வாக்குப்பதிவு அறிவிப்பை' (Postal Ballot Notice) நிறுவனம் மின்னணு முறையில் அனுப்பியுள்ளது. இந்த அறிவிப்பு, நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான (Registrar & Share Transfer Agent) கேஃபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் (KFintech) நிறுவனத்திடமோ அல்லது நிறுவனத்திடமோ அல்லது வைப்புத்தொகை நிறுவனங்களிடமோ (NSDL/CDSL) தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. இதன் நோக்கம், 'தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு' (remote e–voting) முறை மூலமாக மட்டுமே தபால் வாக்குப்பதிவு வாயிலாக உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவதாகும். வெள்ளிக்கிழமை, நவம்பர் 13, 2026 அன்று உறுப்பினராக இல்லாத நபர்கள், இந்தத் தபால் வாக்குப்பதிவு அறிவிப்பைத் தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த தபால் வாக்கு அறிவிப்பானது நிறுவனத்தின் இணையதளமான www.verandalearning.com, பங்குச் சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com மற்றும் www.nseindia.com, மற்றும் KFintech இணையதளமான evoting.kfintech.com ஆகியவற்றிலும் கிடைக்கும்.

டீமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட KYC விவரங்களை சம்பந்தப்பட்ட டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெள்ளிக்கிழமை, நவம்பர் 13, 2026 நிலவரப்படி டெபாசிட்டரிகளிடம் (NSDL/CDSL) இருந்து பெறப்பட்ட உறுப்பினர்கள் / பலன்பெறும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர்கள் இடம்பெற்றுள்ள நிறுவனத்தின் உறுப்பினர்கள், தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர். உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்க வசதியாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்க நிறுவனம் KFintech–ஐ நியமித்துள்ளது.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு காலம் **சனிக்கிழமை, நவம்பர் 21, 2026 அன்று காலை 09:00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி ஞாயிற்றுக்கிழமை, டிசம்பர் 20, 2026 அன்று மாலை 05:00 மணிக்கு (இந்திய நேரப்படி)** முடிவடைகிறது. குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு அப்பால் தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. அதன்பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொகுதி முடக்கப்படும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் ஒருமுறை வாக்களித்துவிட்டால், அதனைப் பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

உறுப்பினர்களின் வாக்குரிமையானது, **வெள்ளிக்கிழமை, நவம்பர் 13, 2026** நிலவரப்படி, நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மொத்த ஈக்விட்டி பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்துள்ள பங்குகளின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இருக்கும்.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் கேள்விகள், பிரச்சனைகள் அல்லது குறைகள் இருந்தால், KFintech–ன் மின்னணு வாக்களிப்பு இணையதளமான https://evoting.kfintech.com–ல் உள்ள "Downloads" பகுதியில் கீழ்தோன்றும் மெனு மூலம் கிடைக்கும் "Help" மற்றும் "FAQs" பிரிவுகள் / மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டைப் பார்க்கலாம் அல்லது evoting@kfintech.com என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்பலாம் அல்லது உதவி துணைத் தலைவர் திரு. வாகோலு ரத்னா பாபு அவர்களை einward.ris@kfintech.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ, 1800 309 4001 (கட்டணமில்லா எண்) என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். மாற்றாக, உறுப்பினர்கள் நிறுவனத்தின் நிறுவன செயலாளரை secretarial@verandalearning.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது +914446901007 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

வெராண்டா லேர்னிங் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
S பாலசுந்தரம்
நிறுவன செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி
(M. No: ACS–11114)

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 20, 2026

SUNDARAM MUTUAL
Sundaram Finance Group

You are cordially invited to the
INVESTOR AWARENESS PROGRAM
In Chennai

Speaker Ms. Amrita Mohanty
Chief Learning Officer and Head – Learning & Development - Sundaram AMC Ltd.

Venue Hotel The Residency
GN.Chetty Road
Chennai - 600017

Day: Saturday, 21 November 2026 | Time: 6:00 PM

RSVP: Mr. H R Muralitharan - 9840794857

For more information please contact:
Sundaram Asset Management Company Ltd
(Investment Manager to Sundaram Mutual Fund)
CIN: U93090TN1996PLC034615
Corporate Office:
1st and 2nd Floor, Sundaram Towers,
46, Whites Road, Royapettah, Chennai-14.
Toll 1860 425 7237 (India) 044 40831500 (NRI)
www.sundarammutual.com
Regd. Office: No. 21, Patullos Road, Chennai 600002.

Mutual fund investments are subject to market risks, read all scheme related documents carefully.

PUBLIC NOTICE

TO WHOMSOEVER IT MAY CONCERN

This is to inform the General Public that the following share certificate(s) of **KOTAK MAHINDRA BANK LIMITED**, Registered Office: 27BKC, C 27, G Block, Bandra Kurla Complex, Bandra (East), Mumbai 400051, Maharashtra, registered in the name of **ANBULINGAM R and sent to Mr. Anbulingam R, S/o Mr. Rajalingam, No. 230, 2nd South Cross Street, Sree Kapaleeshwarar Nagar, Neelankarai, Injambakkam, Kancheepuram District, Tamil Nadu – 600115**, has not been in the possession of the shareholder. This share certificate has been lost / misplaced and is not found.

Name of shareholder: **ANBULINGAM R** Folio Number: **KMF092833**

Certificate No.	Number of Shares	Distinctive No. FROM	Distinctive No. TO	Face Value
176112	100	17576101	17576200	FV 10/-
291010	100	28972968	28973067	FV 10/-
315271	67	41150903	41150969	FV 10/-
405600	267	96090613	96090879	FV 10/-
505729	801	229038655	229039455	FV 10/-
806245	2670	917485051	917487720	FV 5/-

Total Number of Shares: 4005

The Public are hereby cautioned against purchasing or dealing in any way with the above referred share certificate(s). Any person who has any claim in respect of the said share certificate(s) should lodge such complaint with the Company or its Registrar and Transfer Agents **KFin Technologies Limited** (Unit: KOTAK MAHINDRA BANK LIMITED), Selenium, Tower B, Plot No. 31 & 32, Gachibowli, Financial District, Nanakramguda, Serilingampally, Hyderabad – 500 032, Telangana, within 15 days of publication of this notice, after which no claim will be entertained and the Company shall proceed to issue a Duplicate Share Certificate.

CHANGE OF NAME

I, MADHAN KANNIAPPAN S/o KANNIAPPAN R/o No. 284, Kankriya Elite, Flat No. BS1, LIC Nagar, 4th Street, Madipakkam, Kancheepuram, Tamil Nadu-600091, have changed the name of my minor son NIKHIL aged 12 years and he shall hereafter be known as M.NIKHIL.

பெயர் மாற்றம்

நான், **Old given name: Yuvarani, Old Surname Thulasiram,** க/பெ. Johnchristy, பிறந்த தேதி: 28/05/1983, வசிப்பிடம்:எண்.4/287, ஈஸ்வரன் தெரு, மேல்பாக்கம் தண்ணீர் தொட்டி அருகில், மேல்பாக்கம், கண்ணன்பாளையம், திருவள்ளூர், தமிழ்நாடு – 600077 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Surname Johnchristy, New Given name Yuvarani (a) J.Yuvarani** என்று அழைக்கப்படுவேன்.

Yuvarani

AUTHUM ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 707, ரஹேஜா சென்டர், ப்ரீ பிரஸ் ஜர்னல் சாலை, நாரிமன் பாயிண்ட், மும்பை 400 021.
Ph.: (022) 6747 2117, Fax: (022) 6747 2118 E-Mail: Info@Authum.com.

கோரிக்கை அறிவிப்பு

அதேசமயம், இங்கு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டிலிருந்து ("AIIL") நிதி உதவியைப் பெற்றுள்ளனர் (10.05.2024 தேதியிட்ட NCLT உத்தரவின்படி AIILக்கு ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட் ("RCFL") கடன் வழங்கும் வணிகத்தை பிரித்ததன் விளைவாக உருவான நிறுவனம்). கடன் பெற்ற கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்கள் ஆகியோர் பல்வேறு காரணங்களால் தவணைத் தேதிக்கு முன்னதாக அசல் தொகை மற்றும் வட்டியை செலுத்தத் தவறி விட்டனர். AIIL புத்தகத்தில் உள்ளபடி, சொத்து வகைப்பாடு தொடர்பாக நேஷனல் ஹவுசிங் வங்கியால் வழங்கப்பட்ட உத்தரவின் கீழ் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் 2002ன்படி AIIL அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அந்த கணக்குகள் கீழ்குறிப்பிட்டுள்ள தேதியில் நிறைவேற்றப்படாத ஆஸ்திகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002 விதிகள் மற்றும் மேற்கண்ட சட்டம் பிரிவு 13(12) விதி 3ன்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சர்பாசி சட்டம் 2002ன் சட்டம் பிரிவு 13 (2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் அறிவிப்பில் கண்டுள்ள தொகை மற்றும் கூடுதல் வட்டி மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள ஒப்பந்தவிகிதத்திலான தொகை மற்றும் தற்செயல் செலவு, கட்டணம், இன்றைய தேதி வரையிலான கட்டணங்களை இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடைசியாக தெரிந்த முகவரிக்கு இந்த அறிவிப்புகள் அனுப்பப்பட்டு அது அவர்களால் பெறப்படாமல் திரும்ப வந்துவிட்ட காரணத்தால் அது பொது அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண்./ கடன்தாரர் பெயர்/முகவரி	உடன் கடன்தாரர் மற்றும் உத்தரவாததாரர் பெயர் இயக்குனர் பெயர்	என்பிஏ தேதி	கோரிக்கை அறிவிப்பு தேதி	செலுத்த வேண்டிய தொகை	கடன் தொகை
கடன் கணக்கு எண். RLLPCHE000102846 - RLHLCHE000100198 (RHHLCHE000006588) வினோத் சிரக்கல்ஹவுஸ் (இறந்துவிட்டார்) கடன்தாரர்	1. ரஞ்சினி வினோத் 2. பிரதீப் சிரக்கல் 3. சந்தியா பிரதீப் 4. M/s. தீபா பேனல்ஸ் பிரைவேட் லிமிடெட்: (பிரதிநிதித்துவம்) 5. திரு. குஞ்னுண்ணி சிரக்கல் 6. திருமதி. சி. விஜயகுமாரி 7. Ms. நேஹா வினோத் 8. திரு. கிரிஷ் வினோத்	02/ நவம்பர் /2013 & 16/ மே/2017	17-11-2026	ரூ.5,42,12,810.34/– (ரூபாய் ஐந்து கோடியே நாற்பத்து இரண்டு லட்சத்து பன்னிரண்டு ஆயிரத்து எண்ணூற்று பத்து மற்றும் முப்பத்து நான்கு பைசா மட்டும்)	ரூ.30,00,000/– (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மற்றும் ரூ.45,00,000/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்)

அடமான சொத்தின் விவரம்: அட்டவணை "A" (SCHEDULE "A") திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், எண். 82 நொளம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள சிட்டி லைட்ஸ் காலனியில் உள்ள சர்வே எண். 302/1 (தற்போதைய சர்வே எண். 302/1B), சர்வே எண். 302/2, சர்வே எண். 3 (தற்போதைய சர்வே எண். 303/1) ஆகியவற்றில் அடங்கிய மொத்தம் 253528 சதுர அடி (5.82 ஏக்கர்) பரப்பளவு கொண்ட நிலத்தின் அனைத்துப் பகுதியும் துண்டும்; அதன் எல்லைகளாவன: வடக்கே – சர்வே எண். 318–ல் உள்ள நிலம், தெற்கே – சர்வே எண். 294–ல் உள்ள நிலம், கிழக்கே – சர்வே எண். 303/2–ல் உள்ள நிலம், மேற்கே – சர்வே எண். 302/1A–ல் உள்ள நிலம். இது வடசென்னை பதிவு மாவட்டத்திற்கும் கொன்னூர் சார்–பதிவாளர் அலுவலக எல்லைக்கும் உட்பட்டது.

அட்டவணை "B" (SCHEDULE "B") அட்டவணை 'A' நிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளுடன் கட்டப்பட்டுள்ள 'சிட்டி லைட்ஸ் மெடோஸ்' (Citi lights Meadows) என அழைக்கப்படும் கட்டிடத்தின், ஓக் பிளாக் (Block OAK), மூன்றாவது தளத்தில் அமைந்துள்ள சுமார் 1319 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு கொண்ட குடியிருப்பு அடுக்குமாடி குடியிருப்பு எண். A–31. அட்டவணை 'A' நிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளுடன் கட்டப்பட்டுள்ள 'சிட்டி லைட்ஸ் மெடோஸ்' (Citi lights Meadows) என அழைக்கப்படும் கட்டிடத்தின், ஓக் பிளாக் (Block OAK), மூன்றாவது தளத்தில் அமைந்துள்ள சுமார் 1318 சதுர அடி கட்டப்பட்ட பரப்பளவு கொண்ட குடியிருப்பு அடுக்குமாடி குடியிருப்பு எண். A–34.

மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், மேற்கண்ட கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள் மற்றும்/அல்லது அவர்களின் உத்தரவாததாரர்கள் (எது பொருந்துமோ) ஆகியோர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை மற்றும் எதிர்கால வட்டி மற்றும் பொருந்தக்கூடிய கட்டணங்கள் ஆகியவற்றை இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 விதிகள் மற்றும் ஈடுபெற்ற மற்றும் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் சீரமைப்பு பிரிவு 13(4)ன் கீழ் இந்த விளம்பரம் வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்கு பிறகு கூடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஈடுபெற்ற ஆஸ்திகள் சுவாதீனம் எடுக்கப்படும்.

மேற்கண்ட சட்டம் பிரிவு 13 (13)ன் கீழ், எந்த கடன்தாரரும் அறிவிப்பில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யவோ, குத்தகைக்கு விடவோ மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது எந்தவித நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ, ஈடுபெற்ற கடனாளரால் எழுத்துபூர்வமான அறிவிப்பு இல்லாமல் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

தேதி : 21.11.2026
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஆத்தம் இன்வெஸ்ட்மெண்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்